நற்றிணையில் பூச்சிகள்

முனைவர் சு. உமா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி
மேலப்பாளையம்,

பூச்சிகள் (Insects)

பூமியில் வாழும் உயிரினங்களிலேயே அதிக எண்ணிக்கையில் வாழ்பவை பூச்சியினங்களே ஆகும். உலகில் சுமார் ஏழு இலட்சம் பூச்சியினங்கள் வாழ்ந்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நாம் வாழும் பூமியில் முதலில் தோன்றிய இனங்கள் பூச்சிகளே. பூமியில் மட்டும் வாழ்ந்து வந்த அவை இறக்கைகள் கிடைத்தபின் வானத்தையும் வெற்றி கொண்டன. இப்பூமியில் வாழும் உயிரினங்களில் முக்கால் பங்கு பூச்சிகளே ஆகும். பூச்சிகளின் உலகில் பல வேறுபட்ட வடிவங்களையும், ஒரே பிறவியில் பல தோற்றங்களையும் அவை பெறுகின்றன. இவ்வகைப் பூச்சியினங்கள் என பகுக்கப்பட்டுள்ளனவற்றில் நற்றிணையில் காணப்படும் பூச்சிகளைக் குறித்து இங்கு காண்போம்.

ஈயல்

ஈயல் என்பது ஒரு பூச்சியாகும், இதைத் தற்காலத்தில் 'ஈயல்' என்றும் 'கரையான்' என்னும் செல் என்றும் அழைப்பர். சங்க நூல்களில் ஈயலை 'சிதலை' என்றும் குறிப்பிட்டனர்.

'நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல்' (நற்.59)

நெடுங்கோட்டுப் புற்றில்வாழும் ஈயல் என்று நற்றிணை குறிப்பிடுகின்றது. கரையான் கட்டியபுற்றுகளிலேயே பாம்புகள் வாழ்கிறது. "கரையான் புற்றுகளில் பல உறுதியானவை, யானைகள் கால் வைத்தால் கூட சில கரையான் புற்றுகள் அழிவதில்லை"என்பர். (இராம்குமார், 'பூச்சிகளின் புதுமை உலகம்', (ப.103)) மண்ணில் வாழும் ஈயல் 'ரினோடெர்மிடிடே' (Rhino termitidae) என்று அறிவியலில் அழைப்பர். கட்டிடங்களில் அரித்து வாழும் ஈயலினத்தை 'காலர் மிட்டிடே மாஸ்டோ டெர்மிட்டிடே' (Kalermitidae Masto Termitidae) என்னும் வகையைச் சார்ந்தவையாகும். பொதுவாகக் காணப்படும் ஈயல் 'ஓடோன்டெரஸ் ரெடிமனிஸ் மிக்ரோஸ்டிரேஸ்செஸி' (Odonterous redemannis Microstmrese Chesi) 'காப்டோடெர்ப்ஸ் ஹொய்னி ஹொட்டெரோ டெர்ம்ஸ் இண்டி கோலா' (Coptotermes Haini Hetero termes Indicola) ஆகிய குடும்பங்களைச் சேர்ந்ததாகும்.

சிலம்பி

நற்றிணையில் கூறப்படும் பூச்சிகளுள் சிலம்பியும் ஒன்றாகும்.

"கொலைவல் வேட்டுவன் வலைபுரிந்து போகிய
கானப் புறவின் சேவல் வாய் நூல்
சிலம்பி அம்சினை வெரூஉம்
அலங்கல் உலவை அம்காடு இறந்தோரே" (நற்.180)

வேட்டுவன் போட்ட வலையிலிருந்து தப்பிய புறா கருவேல மரத்தில் சிலம்பியால் கட்டப்பட்ட வலையைக் கண்டு அஞ்சுவதாகக் கூறப்பட்டுள்ளது. சிலம்பி தன் வாய்நூலால் வலை நெய்யும் என்பதையும் இப்பாடல் குறிப்பிடுகின்றது.

சிலந்திப் பூச்சியை விடாமுயற்சிக்கு அடையாளம் என்று சொல்வார்கள். சிலந்திப்பூச்சியானது, மற்ற பூச்சி இனங்களிலிருந்து சில மாற்றங்களைப் பெற்ற ஒன்றாகும். பொதுவாகப் பூச்சிகளுக்கு மூன்று இணைக்கால்களே இருக்கும். ஆனால், சிலந்திக்கு நான்கு இணைக்கால்கள் உண்டு.

‘எட்டுக்கால் பூச்சி’ என்று அதற்கு ஒரு பெயரும் உண்டு. சிலந்திக்கு எட்டு கண்கள் உண்டு. ஆனால், நாம் கண்களை உருட்டி அசைத்துப் பார்ப்பது போல் அதனால் செய்ய முடியாது. கண்கள் நிலையாகப் பொறுத்தப்பட்டுள்ளன. கண்களை அசைக்க முடியாது, எட்டு கண்களும் எண் திசைகளில் முகத்தில் பொருந்தியுள்ளது. எனவே எந்தத் திசையிலும் அதனால் நன்றாகப் பார்க்க முடியும், இயற்கையின் விந்தையான படைப்புகளில் சிலந்தியின் கண் அமைப்பும் ஒன்று. சிலந்தி தன்னுடைய உடலிலிருந்து வெளியாகும் வலையையே ஆதாரமாகக் கொண்டு, கீழே விழுந்து விடாமல் நீண்ட தூரம் பறந்து செல்கிறது. “பறக்கும் சிலந்திகள் 10,000 அடி உயரம் வரை சென்றதாகவும், 500 கிலோமீட்டர் தூரம் பறந்துசென்று வேறுஇடத்தை அடைந்ததாகவும் ஆதாரங்கள் உள்ளன. (இராம்குமார், ‘பூச்சிகளின் புதுமை உலகம்’, (ப.122)) சிலந்திகள் இன்று உலகமெங்கும் பரவி இருப்பதற்கு இந்தப் பறக்கும் பழக்கமும் ஒரு காரணமாகும்.

சிலம்பியை இக்காலத்தில் சிலந்தி என்றழைக்கின்றனர். சிலம்பியைப் பொதுவாக ‘ஆரனோஸ் இன்டியுஸ்’ (Aranous indious) என்று அறிவியலில் அழைப்பர். ஆங்கிலத்தில் ‘ஸ்பைடர்’ (Spider) என்றழைப்பர்.

சிள்வீடு

சங்க நூல்களில் அரிதாகக் கூறப்பட்டுள்ள ஒரு பூச்சி சிள்வீடாகும். இதனை நற்றிணை,

“உலவை ஓமை ஓங்குநிலை ஒடுங்கிச்
சிள்வீடு கறங்கும் சேய்நாட்டு அத்தம்” (நற்.152)

சிள்வீடு ஓசையிடுவது மீண்டும், மீண்டும் ஒரேவகையாக இருப்பதால் இப்பாடல் கறங்கும் (Monotongus repetitive) என்று கூறப்பட்டுள்ளது. இந்த பூச்சி எது என்பது குறித்து குறிப்பிடும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

கேரளத்தில் அமைதிப்பள்ளத்தாக்கு மின்திட்டத்தைப் பற்றியக் கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. அதற்கு ஆங்கிலத்தில் ‘சைலண்ட் வாலி ப்ராஜக்ட்’ (Silent vally Project) என்று பெயர். இப்பெயர் இந்தப்பள்ளத்தாக்கில் உள்ள காடுகளில் சிள்வீடு என்ற பூச்சி ஓசையிடாமல் அமைதியாக இருப்பதன் காரணமாகவே வந்தது.

தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் பெரும்பாலான காடுகளில் இந்தப்பூச்சிகள் அடிக்கடி ஒருவகையான சீழ்க்கை ஓசையை (Whining incessantly) எழுப்பிக் கொண்டிருக்கும், இந்த ஓசை நெடுந்தொலைவில் கேட்கும். (பி.எல்.சாமி, ‘சங்க நூல்களில் சில உயிரினங்கள்’, (ப.149)).

பூச்சியினத்தில் சிள்வீடு என்ற பூச்சிதான் சிறப்பு மிக்க பாடும்பூச்சி என்று கருதுவர். (Cicadas are no doubt the celebrated musicians of the insect world – The Hindu, Magazine section, April, 1980 – பி.எல்.சாமி, ‘சங்க நூல்களில் சில உயிரினங்கள்’, (ப.149)) இந்தப் பூச்சியை இனம்கண்டு நற்றிணைப் புலவர்கள் பாடியிருப்பது வியப்புக்குரியது. இந்த சிள்வீட்டை ஆங்கிலத்தில் ‘சிகடா’ (Cicada) என்றழைப்பர். சிள்வீடு அறிவியலில் ‘பிளட்டி ப்ளோயுரா ஆக்டோகட்டடா’ (Platy polmara Octoguttata) ‘பிளட்டி ப்ளோயிரா மக்கிரோனி’ (Platy Poluara Mackironi)> ‘ப்போம் பரியாடுஸ்கா’ (Pomporriatusca) ஆகிய வகைகளைச் சார்ந்ததாகும்.

சுரும்பு

சுரும்பு என்னும் ஒருவகை பூச்சியைப் பற்றிப் பல சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

“சுரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கைச்
சுரும்பு இமிர் அடுக்கம் புலம்பக் களிறு அட்டு” (நற்.112)
“சுரும்புண விரிந்த கருங்கால் வேங்கை” (நற்.168)

இப்பாடல்களில் மலர்களில் தாதுண்ணுவதாகவும், ஊதுவதாகவும் கூறியது தவிர வேறு எந்த செய்திகளும் நற்றிணையில் கூறப்படவில்லை. சுரும்பு எந்தவகைப் பூச்சி என்று அறிவது எளிதாகவில்லை. கன்னடமொழியில் ‘சுருன்ட்பொட்டெ’ என்று வண்ணத்துப்பூச்சியை

அழைப்பதிலிருந்து சுரும்பு வண்ணாத்திப்பூச்சியே (Butterfly) என்று தெரிகின்றது. ‘பொட்டெ’ என்ற சொல் கன்னடம் முதலிய திராவிட மொழிகளில் பூச்சியைக் குறிக்கும். (Cicadas are no doubt the celebrated musicians of the insect world – The Hindu, Magazine section, April, 1980 – பி.எல்.சாமி, ‘சங்க நூல்களில் சில உயிரினங்கள்’, (ப.165)). சுருண்ட வாயுறுப்பு யானையின் துதிக்கைபோல இருப்பதால் சுரும்பு என்று பெயர் வந்திருக்கலாம். தும்பி என்ற பெயர் ஒரு பூச்சிக்குத் தோன்றியது அதே காரணத்தால் தான் கவனிக்கத்தக்கதாகும். பல வண்ணங்களையுடைய இறகுகள் கொண்ட வண்ணத்துப் பூச்சியைத் தவறாக வண்ணாத்துப்பூச்சி என்றழைக்கின்றனர். தமிழ்நாட்டில் சில பகுதிகளில் வண்ணத்துப்பூச்சியை பாப்பாத்தி, மொட்டைப்பாப்பாத்தி என்றும் அழைக்கின்றனர். “சுரும்பு, தும்பி ஆண் வண்டுகள் என்று நிகண்டுகளும், பிற்கால உரையாசிரியர்களும் கூறுவதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. ஒரே பூச்சி வகையில் தான் ஆண், பெண் உண்டு. (Cicadas are no doubt the celebrated musicians of the insect world – The Hindu, Magazine section, April, 1980 – பி.எல்.சாமி, ‘சங்க நூல்களில் சில உயிரினங்கள்’, (ப.166)) என்னும் பி.எல்.சாமியின் கூற்று சரியானதே ஆகும். வண்ணத்துப்பூச்சிக் குடும்பத்தின் அறிவியல் பெயர் ‘ராபலோசியோமா’ (Raopaloceoama) ஆகும்.

தும்பி

தும்பி என்னும் ஒரு வகைப்பூச்சியும் நற்றிணையில் குறிப்பிடப்படுகின்றது.

“காந்தள் ஊதிய மணிநிறத்தும்பி
தீந்தொடை நரம்பின் முரலும்” (நற்.19)
“புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளை செத்து மொய்த்து தும்பி பழஞ்செத்துப்” (நற்.35)
“............ நறவின்
நறுந்தாது ஆடிய தும்பி பசுங்கேழ்ப்
பொன்னுரைக் கல்லின் நன்னிறம் பெறூஉம்” (நற்.85)

தும்பி தாது ஊதுவதாகக் கூறப்பட்டுள்ளது. தாதூதுவது என்பது தேனைக் கவருவது, மகரந்தத்தைக் கவர்வது ஆகியவற்றைக் குறிக்கும். இது சங்கநூல்களில் கூறும் வழக்காகும். இப்பாடலில் நாவல் கனியைத் தும்பி தன்இனம் என்றுகருதி மொய்த்ததாகக் கூறப்பட்டுள்ளது. இச் செய்தியிலிருந்து நாவல் பழத்தைப்போன்று கருநீலமும் உருட்சியும், திரட்சியும் உள்ளது தும்பி என்பது தெரிகின்றது. அத்தகைய பூச்சி இயற்கையில் தும்பியைத் தவிர வேறெதும் இல்லை.

தும்பிக்கு அழகிய உள்சிறகு உள்ளது உண்மையாகும். இதை ‘ஹையலின்விங்ஸ்’ (Hyaline Wings) என்றழைப்பர். நறவம் பூவில் தாதுண்ட தும்பி, தன் கருமையான உடலில் மஞ்சள் நிறமான மகரந்தத் தூளைப் பூசியிருப்பது பொன்னுரைக் கட்டளைக்கல் போன்றிருந்ததாக நற்றிணை கூறியுள்ளது.

பொன்னுரைக் கட்டளைக்கல் கருப்பு நிறமாக இருக்கும். உரசுவதால் அதன் மேல் பொன்துகள் பதிந்திருக்கும். ஆதலின் அதனை மகரந்தம் பூசிய தும்பியோடு ஒப்பிட்டது பொருத்தமானதே. தும்பி அறிவியல்படி ‘ஸெல்லே கார்பா’ (Xylocarpa) என்னும் குடும்பத்தைச் சார்ந்ததாகும்.

தேனீ

தேனீக்கள் என்பனவற்றைக் குறித்தும் நற்றிணை குறிப்பிடுகின்றது. இதில் தேன் என்று குறிக்கப்படும் இடங்களில் சில தேனீக்களைக் குறித்து அமைவதே குறிப்பிடத்தகுந்தது. “தேனீக்களில் 20,000 இனங்கள் உள்ளன.” (இராம்குமார், ‘பூச்சிகளின் புதுமை உலகம்’, (ப.125)) நற்றிணையில்,

“தேனீ செய் பெருங்கிளை இரிய வேங்கை” (நற்.105)
மலிதாது ஊதுந் தேனோடு ஒன்றி வண்டின் இன்னிசை” (நற்.223)

இப்பாடலில் தேனீ தாது ஊதுவதாகக் கூறப்பட்டுள்ளது.

"பிரசம் தூங்கப் பெரும்பழத் துணர
வரை வென் அருவி மாலையின் இழிதர" (நற்.93)

தேனீக்கள் பல கூட்டங்களாக வாழும் சமூக வாழ்க்கையுடையவை. அதனால் பல்கிளைப் பிரசம் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு மலையருவி இறங்கிய இடத்தில் மலைத்தேன் (பிரசம்) தொங்கிக் கொண்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. "இன்றும் குற்றாலத்தில் தேனருவியைப் பார்த்தால் சங்க நூல்கள் கூறும் பிரசம் பற்றிய செய்தியின் உண்மையைத் தெரிந்து கொள்ளாம்" என்பர். பொந்துத் தேனீ தேனைத் தனியாகவும், குஞ்சுப் புழுக்களைத் தனியாகவும் வெவ்வேறு அடைகளில் வைக்கும். அதனால் தேனைத் தனியாகச் சேகரிக்க முடிகின்றது. இந்தத் தேனீயைத் தான் செயற்கைக் கூடுகளில் வளர்க்க முடிகின்றது. தேனீ வளர்ப்போர் இராணித் தேனீயைப் பிடித்து, தேனீக்கூட்டைச் செயற்கைக் கூடுகளில் வளர்ப்பர். "ஒரு கிலோ தேனைச் சேகரிக்க இவை சுமார் 25,000 தலைச் சுமைத் தேனைப் பூக்களிடமிருந்து கொண்டு வருகின்றன."(இராம்குமார், 'பூச்சிகளின் புதுமை உலகம்', (ப.125)) தேனீக்கள் மிகவும் சுறுசுறுப்பானவை.

தேனீக்களில் ஒருவகை சிதர் என்று சங்கநூல்களில் அழைக்கப்படுகின்றது. சிதர் என்றால் சிறிய நீர்த்துளி என்று சில சங்கப்பாடல்களில் வந்துள்ளது. சிறிய தேனீயையும் குறித்து இச்சொல் வழங்கியதாகத் தெரிகின்றது.

"சிதர் நனை முனை இய சிதர்கால் வாரணம்" (நற்.297)

சிதர் என்னும் சிறுதேனீ கூட்டமாக இலவு, முருக்கு முதலிய மரப்பூச்சிகளில் ஓசை செய்ததாகவும் சில சங்கப்பாடல்கள் கூறியுள்ளன. தேன் ஈக்களின் சிறிய தேன் ஈ (Little honey bee) கொம்புகளிலும், புதர்களிலும் சிறிய தேன் கூடுகட்டும், ஒரே அடைதான் கட்டும், அதில் புழுக்களும் தேனும் ஒன்றாகவே கலந்திருக்கும். இதை 'ஆபிஸ் ப்ளோரியா' (Appis florea) என்று அறிவியலில் அழைப்பர். மலைவாழ் மக்கள் மலைத்தேன் ஈயைப் பெருந்தூக்கள் என்பர். சிறிய தேன்ஈக்களைச் சிறுதூக்கள் என்றழைப்பர். (பி.எல்.சாமி, 'சங்கநூல்களில் சில உயிரினங்கள்', (ப.62))

இயற்கையில் மூன்று வகையான தேனீக்கள் உள்ளன. சங்க நூல்களில் சிதர் சிறு தேனீயையும் தேன் என்று பொதுவாகக் கூறப்படும் பொந்துத் தேனீயையும் குறித்து வழங்கியது. அவற்றை முறையே, 'ஆபிஸ் பில்லோரியே' (Apis pliorea) என்றும் 'ஆபிஸ் சின்னிரா' (Apis cinera), 'ஆபிஸ் இன்டிகா' (Apis indica) என்றும் அழைப்பர்.

ஆனால் மலைத்தேனீயைப் பிரித்து, பெருந்தேன் என்றும் பிரசம் என்றும் சங்கநூல்கள் அழைத்துள்ளன. மலைத் தேனீயை அறிவியலில் 'ஆபிஸ் டோர்சடா' (Apis dorsata) என்றழைப்பர். ஆங்கிலத்தில் 'ராக் ஹனி பீ' (Rock honey ee) என்றழைப்பர்.

மின்மினிப் பூச்சிகள்

இயற்கையின் எழிலான படைப்புகளில் மின்மினிப் பூச்சியும் ஒன்று. ஒளி இருக்கும் இடத்தில் எப்போதும் வெப்பம் இருக்கும். ஆனால் மின்மினிப் பூச்சியின் வெளிச்சத்தில் வெப்பம் சிறிதளவு கூட இல்லை. மின்மினிப் பூச்சியின் ஒளி விட்டு விட்டு வீசும். மின்மினிப் பூச்சியைப் பற்றியும் சில பாடல்கள் கூறியுள்ளன.

மரத்தின் உயர்ந்த கிளையில் மின்மினி இருந்தது என்ற கருத்தை,

"பன்மர உயர்கிளை மின்மினி விளக்கம்" (நற்.44)

என்று நற்றிணைப்பாடல் விளக்குகின்றது, சில சங்கப்பாடல்களில் மின்மினியை 'சுடர்க்கடைப் பறவை' என அழைத்திருக்கின்றனர். சுடரைக் கடைசியில் உள்ள பறக்கும் உயிர் மின்மினியாகத்தான் இருக்கவேண்டும். உலகில் எந்த பறவைக்கும் உடலின் கடைசியில் சுடர் இல்லை. மின்மினிக்கு மட்டும்தான் உண்டு, மின்மிப்பூச்சி ஒரு பறக்கும் பூச்சியினம் அல்ல. ஒரு வகையான சிறிய வண்டு இனமே". என்பார் இராம்குமார். மின்மினிப் பூச்சியின் முட்டைகூட ஒளி வீசும் என்பது வியப்படையும் செய்தியாகும். (இராம்குமார், 'பூச்சிகளின் புதுமை உலகம்', (ப.65))

ஒளிவீசும் தன்மை தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகிறது. சில இரவுகளில் மின்மினிப் பூச்சிகளை அதிகமாக வெளியில் காணமுடியாது. ஆனால், மழை பெய்த பிறகு இரவு

பூச்சிகளை அதிகம் காணமுடியும். மின்மினிப்பூச்சி வீட்டிற்குள் நுழைந்தால், பறந்தால் நல்ல சகுனம் எனக் கருதுவாரும் உள்.

மின்மினிப்புழுவை ‘லாம்ப்ரஸ் நொட்டிலுகா’ (Lampyris noctiluca) என்றழைப்பர். மின்மினிப் பூச்சியை ‘லுசியோலா கர்லமி’ (Lociola garlami) ‘லுசியோலா சர்கம்டட்ஸ்’ என்றும் அழைப்பர்

முயிறு

முயிறு என்று சங்கஇலக்கியம் குறிப்பிடுவது எறும்பையாகும்.

“பழனப் பாகல் முயிறு முசு குடம்பை
கழனிநாரை உரைத்தலிற் செந்நெல்
விரவு வெள்ளாசியின் தா அம் ஊரன்” (நற்.160)

சங்க நூல்களில் இரண்டு பாடல்களில் மட்டும் நற்றிணை (160), ஐங்குறுநூறு (99), ஆகிய முயிறு என்ற எறும்பைப் பற்றிக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

“பழனப்பாகல் முயிறு முசு குடம்பை
கழனி எருமை கதிரொடு மயக்கும்” (ஐங்குறுநூறு, (பா.99))

முயிறு இலைகளைச் சேர்த்து தைத்துக் கூடுகட்டும், இந்த எறும்பின் முட்டைகளிலிருந்து நூலை எடுத்து இலைகளை நூலால் தைத்துக்கொள்கின்றன. இதனைத் தற்போது ‘முசிறு’ என்று குறிப்பிடுகிறார்கள். இந்த முயிறு ஆங்கிலத்தில் ‘ரெட் வீவர் ஆன்ட்’ (Red Weaver ant) என்றும் அறிவியலில் ‘ஒக்காபிலா சமா்டிக்னா’ (Occophylla Smardigna) என்றழைப்பர்.

வண்டு

நம்மில் பெரும்பாலோர் ஊர்ந்து செல்லும் அனைத்துப் பூச்சிகளையும் ‘வண்டுகள்’ என்று சொல்வதுண்து. ஆனால், வண்டுகளின் குறிப்பிடக்கூடிய தன்மை அவைகளின் இறக்கைகள் மிகவும் கடினமாக இருக்கும் என்பதாகும். “கண்டறியப்பட்ட பூச்சியினங்களுக்குள் பத்தில் நான்கு வண்டுகளாகும். இதுவரை 3,00,000 வண்டுகள் கண்டறியப்பட்டு பெயரிடப்பட்டுள்ளன.” (இராம்குமார், ‘பூச்சிகளின் புதுமை உலகம்’, (ப.40)) வண்டை பல நற்றிணைப்பாடல்கள் கூறியுள்ளன. ஆனால் அப்பாடல்களில் வண்டினைக்குறித்த விளக்கங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

“நீயும் யானும், நெருநல் பூவின்
நுண்தாது உரைக்கும் வண்டினம் ஒப்பி” (நற்.27)

“பாணன் கையது பண்புடைச் சீறியாழ்
யாணர் வண்டின் இம்மென இமிரும்” (நற்.30)

“குறுநிலைக்குரவின் சிறு நனைநறுவீ
வண்டு தரு நாற்றம் வளிகலந்து ஈய” (நற்.56)

வண்டு தாது ஊதுவதாகவும், யாழைப்போல இம்மென இமிருவதாகவும் இப்பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. வண்டுக்கு ஆங்கிலத்தில் ‘பேம்பீபீ’ (Bombee bee) என்று பெயர். இதனை அறிவியலில் ‘பேம்புஸ் ஓரண்டைல்ஸ்’ (Bombus oreintails) என்றழைப்பர்.

தொகுப்புரை

பூச்சியினங்களாக தேனீ, சிதர், தும்பி, சுரும்பு, வண்டு, சிலம்பி, மின்மினிப்பூச்சிகள், ஈயல், சிள்வீடு, முயிறு போன்றவையும் இவற்றின் வாழிடங்கள், தன்மைகள், விலங்கியல் பெயர், ஆங்கிலப்பெயர் என்பவைகளும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. மேலும், பூச்சிகளின் இறக்கைகள், உணவுகள் போன்றவையும் நுண்மையான வகையில் நற்றிணைப்புலவர்களால் விளக்கப்பட்டுள்ளன.